# *DEPOSITION OF WITNESS*

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No. 577/2023

## PW: 10

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ரவிச்சந்திரன் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.சண்முகம் | Occupation: | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Village : | கும்பகோணம் | Age : | 60 |

Solemnly affirmed by Thiru.A.Senthil Kumar, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 21st day of May 2025.

Signature of Witness.

(Accused Present, Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் பந்தநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 18.09.2021 அன்று நான் பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயேந்திரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த திருப்புறம்பியம் பாலக்கரை மேலத்தெரு, மகாலிங்கம் மகன் அய்யப்பன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று 2.00

மணிக்கு காவல் நிலையம் வந்து குற்ற எண்.547/2021 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். அவர் இறந்து விட்ட காரணத்தினாலும், அவரது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குறித்து நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை கும்பகோணம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2) அன்றைய தினமே நான் எனது விசாரணைக்கு இந்த வழக்கு கோப்பினை எடுத்துக் கொண்டு கடந்த 18.09.2021 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான MGR காலனி, தேனாம்படுகை வடக்கு தெரு, ஜெயக்குமார் வீட்டின் முன்பு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் கோவிந்தசாமி மற்றும் மணிகண்டன் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் மேற்கண்ட சாட்சிகளிடம் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும். பின்பு கும்பகோணம் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அய்யப்பன், அஜீத், ஜெயக்குமார் ஆகியோர்களை விசாரித்து அவர்களிடமிருந்து வாக்குமூலம் பெற்றேன். சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அய்யப்பன், மகேந்திரன், ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகளான கோவிந்தசாமி,

மணிகண்டன் ஆகியோரை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயேந்திரனை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதன்பிறகு எனக்கு பணி மாறுதல் வந்ததால் நான் வழக்கு கோப்பினை காவல் நிலையம் வசம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2025.05.21 17:05:09 +0530

*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.